


## விஷ் ஷ் ஷ் ஷ்.......

வெள்ளித் தகடுபோன்றதொரு நூலிழை ஐம்பதடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த ஹெலிகாரிலிருந்து சீறிக்கொண்டு போனது.......!

அதன் இலக்கு — மொஜாவ் பாலைவனத்தில் தன்னந் தனியாய் நின்றதொரு ஆய்வுக் கூடம்!

எஃகைவிட உறுதியான அந்த நூலிழையின் மறு முனையில் இருந்த கொக்கி ஆய்வுக் கூடத்தின் கூரையில் கனகச்சிதமாக ஒட்டிக்கொண்டது,

மறுகணம் ஹெலிகாரிலிருந்து ஒரு விசித்திர உருவம் வெளிப்பட்டது!

நல்ல உயரமாய்... சாட்டையைப்போன்ற உடலமைப்புடன்.. ... பளபளக்கும் கறுப்பு உடையில் இருந்தான் அந்த மனிதன்! முகத்திலோ ஒரு விஷமப் புன்னகை! அது வேறுயாருமில்லை-

---

**''மரணப் பணி''யுடன் இணைப்பு!**

''ஹெலி-காரில் இங்கேயே வட்டமடியுங்கள் ஆர்டினி! நான் சீக்கிரத்தில் திரும்பிடுவேன்!'' தோரணையான அந்தக் குரல் ஹெலிகாரின் காற்றுடிகள் ஏற்படுத்திய சத்தத்தையும் மீறி ஒலித்தது!

ஹெலிகாரின் கண்ணாடிக் கூண்டினுள் நின்றுகொண்டிருந்த இரு உருவங்களும் ஏக நேரத்தில் ''ஓ.கே. பாஸ்'' என்றன! அவர்கள் ராய் ஆர்டினியும், புரபஸர் பெல்ஹாமும்! ஸ்பைடரின் அற்புத சகாக்கள்!

அதற்குள் ஸ்பைடர் நூலிழையைப் பற்றிக்கொண்டு 'விர்ர்ர்ர்'ரெனப் பாய்ந்து ஆய்வுக் கூடத்தின் கூரையைத் தொட்டிருந்தான்!

இடுப்பிலிருந்த கறுப்புத் துப்பாக்கி ஒன்றை கையில் எடுத்துக்கொண்டே கூரையின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்ணாடித் துவாரத்தை நோக்கி அடியெடுத்தான் ஸ்பைடர்!

அது சாதாரணத் துப்பாக்கி அல்ல என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்!

## -2-

ஆய்வுக் கூடத்தினுள்ளே வெள்ளை உடுப்பிலிருந்த நான்குபேர் ஒரு பளபளக்கும் அலுமினியப் பெட்டியை சுற்றி நின்று ஏதோ விவாதித்துக்கொண்டிருந்தனர்!

அப்பொழுது உயரேயிருந்துவந்த 'கணீர்' குரல் குறுக்கிட்டது- ''ஆகா...... எனக்காக 'மால்' தயாராக இருக்கா? பிரமாதம்! இதோ இந்த ஸ்பைடரே நேரில்வந்து வாங்கிக்கொள்வான்!

சிலந்திப் பூச்சின் லாவகத்துடன் உள்ளே குதித்த ஸ்பைடர், அந்த அலுமினியப் பெட்டியை gloves அணிந்த ஒரு கரத்தால் வாரி எடுத்துக்கொண்டான்!

சுற்றி நின்றுகொண்டிருந்தவர்களின் முகங்கள் அதிர்ச்சியில் வெளிறிப்போயிருந்தது! ஒரே ஒருவன் மட்டும் மூலையில் இருந்த போனில் தன் சகாக்களுக்கு எச்சரிக்கை விடுத்துக்கொண்டிருந்தான்!

மறு நிமிஷம் அந்த ரூமின் கதவை படாரெனத் திறந்து கொண்டு இரண்டு-தடியர்கள் உள்ளே புகுந்தனர் - கையில் இயந்திரத் துப்பாக்கிகளுடன்!

அவர்களைத் தொடர்ந்து குட்டி யானையைப்போல ஒரு மனிதன் மஞ்சள் நிற சூட் அணிந்துகொண்டு வந்தான்! கழுத்தில் தொங்கிய டாலரிலோ கோழிமுட்டை சைஸிலானதொரு வைரம் டாலடித்துக்கொண்டிருந்தது! ''நாசமாய்ப்போச்சு ... இவன் ஸ்பைடர் அல்லவா? சுட்டுத் தள்ளுங்கள்'' என்று வீறிட்டான்!

''ஓகே மிஸ்டர் ரோலி-போலி!'' என்றவாறே காவலாளிகள் ''தோட்டா மழையை''த் துவக்கினர்!

ஆனால் ஸ்பைடர் மேஜைமீது நின்றுகொண்டிருந்தால்தானே குண்டுகள் தாக்குவதற்கு!! தன் கையிலிருந்த துப்பாக்கியை உத்திரத்திலிருந்த கண்ணாடி துவாரத்தை நோக்கிச் சுட்டான்! அதிலிருந்து பாய்ந்துசென்ற வலையிழைகளைப் பற்றிக்கொண்டு நொடிப்பொழுதில் மேலே ஏறிப் போய்விட்டான்!

அறை முழுவதும் தோட்டாக்கள் பொழிந்துகொண்டிருக்க ஒரு காவலாளி ஓடிப்போய் ஏணியை எடுத்துவந்து கண்ணாடி துவாரத்தின்மீது சாத்தினான்! மறுகணம் மேல்மூச்சு - கீழ்மூச்சு வாங்க இருவரும் ஏணியில் ஏறினார்கள்!

அவர்களின் முயற்சி ஏனோ ஸ்பைடருக்கு சிரிப்பையே வரவழைத்தது! தலையைச் சாய்த்து அட்டகாசமாக சிரித்துக் கொண்டே தன் துப்பாக்கிக்கு திரும்பவும் உயிர்கொடுத்தான்! சீராகப் பாய்ந்த வலையிழைகள் இரு தடியர்களையும் சுத்தமாகக் கட்டிப்போட்டது!

''மூளை கெட்ட முண்டங்களா! ஸ்பைடரை பிடிக்கவரும் முகரையைப் பாருங்கள்!'' என்று எக்காளமிட்டவாறே நடக்க ஆரம்பித்தான்!

''இவர்களைச் சொல்லித் தப்பில்லை! குற்றவியலில் ஈடு இணையற்ற நாயகனாக விளங்கி, பின்னர் நியாயக் காவலனாக உலவும் இந்த அதிபராக்கிரமசாலியை பிடிக்க இந்த அரை வேக்காடுகளை அனுப்பியிருக்கிறானே-அந்தப் பயலின் மூளையை

சோதித்துப் பார்க்கவேண்டும்!'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

## —3—

ஆய்வுக் கூடத்திற்குள் ஒரே களேபரமாய் கிடந்தது! 'ரோலி-போலி' என்றழைக்கப்பட்ட அந்தத் தடியன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க வலேயில் பொட்டணமாய் தொங்கிக் கொண்டிருந்த தன் காவலர்களே திட்டித் தள்ளிக்கொண்டிருந்தான்!

வெளியிலிருந்த மற்ற காவலர்கள் ஹெலி-காரை நோக்கி ஏறிக்கொண்டிருந்த ஸ்பைடரை குறிவைத்தனர்! கீழேயிருந்து பார்ப்பவர்களுக்கு ஸ்பைடர் பற்றிக்கொண்டிருந்த மெல்லிய நூலிழை தெரியவில்லே! அதனுல் பார்ப்பதற்கு ஸ்பைடர் என்னவோ அந்தரத்தில் தொங்குவதுபோலவே தெரிந்தது!

அதைப்பார்த்த மிரட்சியிலோ-என்னவோ, காவலர்கள் **'கன்னு-பின்னு'வென்று** சுட்டுத்தள்ளினுர்கள்! ஹெலி-காரையோ, ஸ்பைடரையோ தொடவில்லே தோட்டாக்கள்!

ஹெலி-காரினுள் பத்திரமாய் நுழைந்துவிட்ட மறுகணம், கீழே நின்றவர்களே நோக்கிக் கேலியாகக் கையசைத்தான் ஸ்பைடர்! அவனது பிசாசுத்தனமான சிரிப்பு அந்தப் பிராந்தியம் முழுவதும் எதிரொலித்துக்கொண்டிருந்தது!

## —4—

ஆனுல் கீழே நின்றுகொண்டிருந்த மிஸ்டர் ரோலி-போலியின் முகத்திலும் பெரிய புன்னகை ஒன்று ஒட்டிக்கொண்டிருந்தது! சதைக் குவியலுக்கு மத்தியில் இடுக்கிப்போயிருந்த அவனது கண்களில் விஷமத்தனமான திருப்தி தாண்டவமாடியது!

''பயலே வசமாய் டபாய்ச்சுட்டோம்! இல்லேயா பாஸ்?'' என்று கேட்டான் ஒரு காவலாளி!

''ஓ. யெஸ்! என்ருன் ரோலி போலி, ''அவனேக் குறிவைக்காமல் வேண்டுமென்றே கண்ட பக்கமெல்லாம் நாம் சுட்டதை அவன் கவனிக்கவில்லே! அந்த அலுமினியப் பெட்டியை அவன் திருடிப்போக வேண்டும் என்பதுதான் என் நோக்கம் என்பது அவனுக்குத் தெரியாது!

''பெட்டிக்குள்ளே ஏதோ பொக்கிஷம் இருக்குதுன்னு பயல் கனவு கண்டிருப்பான்!

''அதேதான்! இப்படி ஒரு ''விலையுயர்ந்த'' பெட்டி என்னிடம் இருப்பதாக ஒரு கதையைக் கட்டிவிட்டு அதை ஸ்பைடரின் காதில் போட்டுவைப்பதற்காக அவனது திருட்டு சகா ஆர்டினிக்குப் பணம் கொடுத்திருக்கிறேன்! இந்த சிலந்தி மடையனும் ஆர்டினி சொன்னதை நிஜமென்று நம்பி என் வலையில் வசமாய் விழுந்துவிட்டான்!"

பாலைவனத்தின் உக்கிரவானத்தின் ஒரு மூலையில் கடுகு போல இப்பொழுது தெரிந்த ஹெலி-காரை பார்த்தவாரே, ''அதுசரி பாஸ்! அந்தப் பெட்டிக்குள் என்னதான் இருக்கு? என்று கேட்டான் இன்னொரு காவலாளி!

''சீக்கிரத்திலேயே தெரிந்துகொள்வாய்! ஸ்பைடரும் தெரிந்துகொள்வான்- ஆனால் அதற்குள் அவனுக்கு எமலோக பதவி உறுதியாகியிருக்கும்! என்றவாறே குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான் ரோலி-போலி!



-5-

உயரே ஹெலிகாரில்-

''தூள் கிளப்பிட்டீங்க பாஸ்! அமெரிக்காவின் நம்பர் ஒன் கேடியான ''Mr. ரோலி போலி' யின் கண் முன்னாலேயே கோடி பெறுமானமுள்ள இந்த டப்பாவை ஒண்டியா அபேஸ் பண்ணிட்டு வந்தது மட்டுமில்லாம இன்னமும் இப்படி ஹா-யா சிரிச்சுக்கிட்டிருக்கீங்க! பெரிய ஆள்தான்!'' என்று ஐஸ் வைத்தான் ஆர்டினி!

ஸ்பைடரின் முகத்திலிருந்து அந்த விஷமப் புன்னகை அகலவேயில்லை! ஆனால் அவனது தொனியிலோ சந்தேகம் கொப்பளித்தது "என்னைப் பற்றி நீ சிலாகித்துப் பேசும் போதெல்லாம் எனக்கு சந்தேகம்தான் வருகிறது ஆர்டினி! உன் பேச்சைக் கேட்டுத் தான் இந்த டப்பாவை அபகரித்து வந்திருக்கிறேன்! இதில் நிஜமாகவே கோடி டாலர் பெறுமானமுள்ள சரக்கு இருக்கிறதா" என்று பார்க்க வேண்டும்!

"அட.. என்ன பாஸ்! என்னைப் போயா சந்தேகப்படுகிறீர்கள்-? அப்படி சந்தேகப்படும் மனுஷன் டப்பாவை எதுக்கு திருடணுமாம் தெரியலையே?" என்று முனகினான் ஆர்டினி!

" பரதேசிப் பயலே.. காரணம் இல்லாமல் இந்த ஸ்பைடர் எதுவும் செய்யமாட்டான் என்பது இன்னமுமா உனக்குப் புரியவில்லை! ரோலி - போலி நாளுக்கு நாள் பெரிய கேடியாகி வருகிறான்! ஒரு காலத்தில் நான் விட்டுச் சென்ற "குற்றச் சக்கரவர்த்தி" எனும் பட்டத்தை அவன் எட்டி விடுவானோ என்ற சந்தேகம் எனக்கு! சாதாரண அலுமினியப் பெட்டியை அவன் இத்தனை தூரம் பாதுகாத்து வருகிறானென்றால் இதில் ஏதோ ரகசிய ஆயுதம் இருக்கிறது என்று அர்த்தம்! அதைப் பயன்படுத்தி நாட்டுக்கு அபாயம் ஏற்படுத்தும் முன் அவனைத் தடுத்தாக வேண்டும் என்பதற்காகவே இங்கு நான் வந்தேன்!"

ஹெலி-காரின் கண்ணாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த ஸ்பைடரின் முகத்தில் இன்னமும் புன்னகை தங்கியிருந்தது. "இதோ- நம் கோட்டை வந்து விட்டது. சற்றைக்கெல்லாம் பெட்டிக்குள் என்ன இருக்கிறதென்று தெரிந்து விடும்! "

வெறிச்சோடிக் கிடந்த பாலைவனத்தின் நடுவே நின்று கொண்டிருந்த ஒரு கற்கோட்டையினுள் ஹெலி-கார் மெள்ள இறங்கியது! ஸ்பைடரின ரகசியத் தலைமையகம் அதுதான்! உலகத்தின் அதி நவீன விஞ்ஞானக் கருவிகளின் உதவியோடு குற்றத்தை எதிர்த்துப் போராட ஸ்பைடர் குழு திட்டம் தீட்டும் பாசறை அது தான்!

மூவரும் நேராகப் பட்டறையினுள் நுழைந்தனர். ஸ்பைடரின் கட்டளைக்கிணங்க லேசர் டிரில்லரின் உதவியுடன் அந்த மர்மப் பெட்டியைத் திறக்கும் முயற்சியில் இறங்கினார் புரபஸர் பெல்ஹாம். அவருக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தான் ஸ்பைடர்.

ஆனால் ஏதோ ஒரு ஆறாவது புலனின் உந்துதலால் திடீரெனத் திரும்பிப் பார்த்த பொழுது ஆர்டினி 'திடு திடு' வென்று ஹெலி-காரை நோக்கி ஓடுவது தெரிந்தது!

நொடிப் பொழுதில் புலியைப் போல் பாய்ந்த ஸ்பைடர் ஆர்டினி-யின் பிடறியை பிடித்து ஒரு அறை விட்டான்! ஏற்கனவே பீதியில்



வெளிறிப் போயிருந்த ஆர்டினியின் முகம் இப்பொழுது பேயறைந்தது போலானது!

''வாயைத் திறந்து பேசு சாத்தானின் அவதாரமே-! ஏன் தப்பித்து ஓடப் பார்த்தாய்? உண்மையை உளறிவிடு - இல்லேயேல் நாக்கை அறுத்து ஊறுகாய் போட்டு விடுவேன்!'' ஸ்பைடர் கர்ஜித்தான்!

ஆர்டினியிடமிருந்து பதிலேதும் வரவில்லேயென்றவுடன் ஸ்பைடருக்கு கோபம் தாங்கவில்லே! 'தர தர'வென்று இழுத்துப் போய் பட்டறையின் மூலேயிலிருந்த உலேக்கு நேராக நிறுத்தினன்!

''திருட்டு நாயே-உண்மையை சொல்லாவிட்டால் உன் முகரையை தீயில் வாட்டிவிடுவேன்! பேசு பேசு - அற்பப் புழுவே!''

தீயின் ஜுவாலேகள் ஆர்டினியின் முகத்தை முத்தமிட நெருங்கியபோது ஆர்டினி அலற ஆரம்பித்தான! ''உண்மையை சொல்லி விடுகிறேன்! எ-என்னே விட்டுடுங்கள்'' என்று தட்டுத் தடுமாறிப் புலம்பினன்!

''அந்த டப்பாவில் ஒரு புதுவகை விஷவாயு இருக்குது-! ரோலி-போலியின் விஞ்ஞானிகள் அதை உருவாக்கியிருக்காங்க! அதை சுவாசித்தால் மனுஷனோட சிந்திக்கும் சக்தி போயிடும்! ரோலி-போலியின் கட்டளேக்குக் கட்டுபடுவாங்க-! தூரத்தில் இருந்தால் கூட, இந்த வாயுவை சுவாசித்து விட்டவங்களே ரோலி-போலியால் டிரர்ன்ஸ்மிட்டர் மூலமா கட்டுப் படுத்த முடியும்!''

''ஸோ- ரோலி-போலியிடம் ஒரு நாட்டையே அடிமையாக்கும் சக்தி இருக்கிறதாக்கும்! அதை முதன் முதலாக என் மீது பயன்-படுத்திப் பார்க்க நினைத்திருக்கிறான்!'' அதே புன்னகையோடு ஸ்பைடர் பேசினான்.

''இந்த டப்பாவில் கோடி டாலர் பெறுமானமுள்ள சாமான் இருப்பதா உங்க கிட்டே கதை விடுறதுக்குக் காசு தந்தான்! இந்த டப்பாவை நீங்க திருடிப் போகணும் என்பதுதான் அவன் திட்டம்!'' ஆர்டினி முழுவதையும் உளறிக் கொட்டினான்!

அப்பொழுது புரபஸர் பெல்ஹாம் அவசரம் அவசரமாய் ஓடி வந்தார்- '' ஸ்பைடர்! அந்த டப்பாவை ஏற்கனவே திறந்து விட்-டேன்!'' என்று சொன்னார்.

'' உடனே பூட்டித் தொலையுங்கள்!''

''காலம் கடந்திடுச்சு பாஸ்'' என்று இடைமறித்தான் ஆர்டினி "அந்த வாயுவிற்கு கலரும் கிடையாது நெடியும் கிடையாது! ஏற்-கனவே அதை சுவாசித்திருப்போம்! இனி நாம் எல்லோருமே ரோலி போலியின் அடிமைங்க!''

-6-

ஆய்வுக் கூடத்தில் Mr. ரோலி-போலி தன் சகாக்களோடு டிரான்ஸ்மிட்டரை இயக்கிக் கொண்டிருந்தான்! நீர்யானை போன்ற அவன் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை நீண்டிருந்தது!

கொஞ்ச நேரத்தில் ஸ்பைடர் தன் பசங்களோடு இங்கே வந்து சேருவான் பாருங்கள்' என்று கொக்கரித்தான்!

அதற்குள்-

''பாஸ்- பாஸ், ஸ்பைடரின் ஹெலி-கார் வந்து இறங்கிடிச்சு! தூக்கத்தில் நடப்பவன்களைப் போல வருகிறான்கள்! என்று அறிவித்தான் ஒரு காவலாளி!

'' அந்த ஸ்பைடர் பயல் இனி உங்கள் அடிமை பாஸ்!''

''ஆமாம்! நம் வாயுவை சுவாசித்து விட்டார்களல்லவா-இனி என் பூட்ஸை நக்கச் சொன்னால் கூட மறு வார்த்தை பேசாமல் செய்து விடுவார்கள்! டிரான்ஸ்மிட்டர் மூலமாகவே பசங்களை இங்கே வரவழைத்து விட்டேன் பார்த்தீர்களா?'' என்ற ரோலி-போலியின் குரலில் பெருமிதம் வழிந்தோடியது!

அப்பொழுது 'படாரென' கதவு திறந்தது. ஸ்பைடர், ஆர்டினி,

பெல்ஹாம், வரிசையாக உள்ளே வந்தார்கள். ஸ்பைடரின கைக ளில் கறுப்பு அலுமினிய டப்பா மின்னிக் கொண்டிருந்தது!

''அங்கேயே நில்! நான் சொல்வதை நன்ருக கவனி! என்ருன் ரோலி-போலி!

விஷமப் புன்னகையோடு ஸ்பைடர் நின்ருன்!

''நீ என்னுடைய அடிமை ஸ்பைடர்! உன்னை மயக்கியுள்ள இதே வாயுவைக் கொண்டு முதலில் அமெரிக்காவை பிறகு இந்த உலகத்தையே அடிமையாக்கப் போகிறேன்! ஒரு காலத்தில் குற்ற உலகின் நெப்போலியனுகத் திகழ்ந்த நீ இனி என்னுடைய எடு-பிடியாளாக வேலை பார்க்கப் போகிருய்! புரிகிறதா?

''புரியவில்லையடா தடிப் பிசாசே!'' என்று நிதானமாய் பேசிய ஸ்பைடர் கறுப்புப் பெட்டியின் மூடியைத் திறந்தான்!

''எ-என்ன இது? என் கட்டுப்பாட்டிலிருந்து எப்படி தப்பினுய்?''

''நாம் எல்லோரும் தொலைந்தோம்! விஷவாயு கசிந்து விட்டது! ம்ம்ம் . சீக்கிரமாய் ஸ்பைடரை சுட்டுக் கொல்லுங்கள்'' பரபரப்புடன் கத்தினுன் ரோலி போலி!

காவலர்கள் துப்பாக்கிகளை நோக்கிப் பாய்ந்தனர் - ஆனல் ஸ்பைடர் ஒரே தாவாகத் தாவி, அறையின் ஓரத்திலிருந்த டிரான்ஸ் மீட்டரை எட்டிப்பிடித்து அதன் ஸ்பீக்கருக்குள் பேசினுன்!

''துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள்! டப்பாவிலிருந்து கசிந்து வரும் வாயுவை ஏற்கனவே சுவாசித்து விட்டதால் நீங்கள் அனை-வரும் இந்த இயந்திரத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்து விட்டீர்கள்! இனி எல்லோரும் என் அடிமைகள்!''

காவலர்கள் மறுப்பின்றி ஒத்துழைத்தனர்! வாயுவை சுவாசித் திருந்த ரோலி-போலியும் கூட வாய் திறக்கவில்லை!

ஸ்பைடரின் முகத்தில் தங்கியிருந்த புன்னகை பெரிதாகியது!

''இனி இந்த விஷ வாயுவின் ஒரு துளி கூட மிஞ்சியிருக்கக் கூடாது! இந்த ஆய்வகம் முழுவதையும் தரைமட்டமாக்கி, தீ வைத் ததாக வேண்டும்! புரிகிறதா?''

''முழுவதையும் கொழுத்தி விடுவோம்'' என்று காவலர்கள் கோரஸாக பதில் சொன்ஞர்கள்!

''ரோலி-போலி, நீ ஹெலி காரில் ஏறி எங்களோடு வருகிறாய்! உன் கொழுப்பு கறைய சிறைச் சாப்பாடு தான் லாயக்கு!''

ரோலி-போலி பொம்மையைப் போல நடந்து போய் ஹெலி-காரில் ஏறிக் கொண்டான்!

ஹெலி-கார் உயரே கிளம்பியிருந்த போது ஆய்வகத்தை தீயின் நாக்குகள் கபளீகரம் செய்து கொண்டிருந்தன! விஷவாயுப் பீப்-பாக்கள் மீது ஜுவாலைகள் பட்டவுடன் பலத்த ஓசையுடன் அவை வெடித்துச் சிதறின!

—7—


ஆர்டினிக்கும், பெல்ஹாமுக்கும், விலங்கு மாட்டப்பட்டிருந்த ரோலி-போலிக்கும் சிறிது சிறிதாக தெளிவு ஏற்பட்டது!

''பா-பாஸ்! என்ன நடந்தது? டப்பாவிலிருந்து வாயு கசிந்த போது நீங்களும் எங்களோடு தானே இருந்தீர்கள்! உங்களை மட்டும் அது எப்படி பாதிக்கவில்லை?'' என்று கேட்டார் பெல்ஹாம்!

''வாயுவை சுவாசித்திருந்தால் தானே பாதிப்பதற்கு?'' என்று கேட்டு பலமாக சிரித்தான் ஸ்பைடர்!

''எ-என்ன சொல்கிறீர்கள்?''

''உனக்கு ஞாபகம் இருக்கிறதா? ரோலி போலியை ஒண்டி-யாக சமாளித்து விட்டு இன்னமும் புன்னகை செய்ய எப்படித்தான் முடிகிறதோ என்று ஆர்டினி கேட்டானல்லவா? அதே புன்னகை இன்னமும் என் முகத்தில் உள்ளது எப்படி தெரியுமா?''




கழுத்துக்குப் பின்னால் கையை விட்டு 'சர்ர்'ரென்று சருகு போன்ற ஒரு முகமூடியை உரித்தெடுத்தான் ஸ்பைடர்!

''இந்த விவகாரம் ஆரம்பித்த நேரம் முதலாவதாகவே நான் இந்த ரப்பர் முகமூடியை அணிந்து வருகிறேன்! எப்பொழுதுபார்த்தாலும் சிரித்துக் கொண்டேயிருப்பது போலத் தோன்றியது. இதனால் தான்! ஆகவே அந்த விஷ வாயு என்னை பாதிக்கவில்லை. ரோலி-போலியைப் போன்ற தெருப் பொறுக்கி நாய்களோடு மோதும் போது இந்த ஸ்பைடர் எந்தவித ரிஸ்க்கும் எடுப்பதில்லை, புரிகிறதா?'' என்றவாறே உரக்கச் சிரித்தான்!

இம்முறை அவன் முகத்தில் நீண்டிருந்தது நிஜப் புன்னகை!

முற்றும்.

பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்.
முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374,
சிவகாசி-626 123. போன்: 21159. அச்சிட்டோர்:
தி விஜய் புக்ஸ், சிவகாசி. வெளியீடு எண்: 48.




ஒரு வழியில் பார்த்தால் இது நம் டீமின் நன்மைக்காகத்தான்! ஆட்டத்தின் போது சறுக்கி விழுந்து மானத்தை வாங்குவதை விட இப்போதே பயல் சறுக்கி விட்டானென்றால் வேலை லேசாகி விடும்!
ஹேய் விச்சு- சட்டு புட்டுனு வா!
இதோ!
பறந்து வருகிறேன் பாாாா-
அம்மாடியோவ்!
உப்!
எந்த மடையன் இதை வாசலில் போட்டு வைத்தானோ தெரியவில்லை!
உப்!
பிறகு டாக்டரின் வீட்டில்-
SURGERY
பாவம் கிச்சு- ஒரு வாரத்திற்கு புட்பால் ஆடவே முடியாதாம்! இந்த வாரம் முழுவதும் அவனுக்குப் பதிலாக நான் தான் விளையாடணும்!
12

# ஹாட்-லைன்!

## வெல்கம் டு ஹாட்லைன்!

லயன் 50-வது வெளியீட்டைப் பற்றியும்-அதைத் தொடர்ந்து வரயிருக்கும் இதழ்களையும் பற்றியும் இந்தப் பகுதியில் எழுதப் போகிறேன்!

லயன் 50-வது இதழில் ஆறு கதைகள் வருகின்றன-! இலவச இணைப்பாக ''***மேன்மை தகு ஆர்ச்சி அவர்களே***'' என்ற குட்டி நாவலும் கிடைக்கும்!

ஜூன் மாதம் புதியதொரு ஹீரோவை அறிமுகம் செய்யப் போகிறோம்! ''***மிஸ்டர் ஜெட்***'' என்ற பெயருடன் வரும் இந்தப் புதியவர் ஒரு ரோபோ! ஆமாம் — நமது இரும்பு மனிதன் ஆர்ச்சிக்குப் போட்டியாகக் கிளம்பி வருகிறார் இந்த இரும்பு சி. ஐ. டி.! மிகப் புதுமையான கதையமைப்போடு வரும் ''***மிஸ்டர் ஜெட்***'' டுக்கு வரையப்பட்டிருக்கும் சித்திரங்கள் பிரமாதமாய் இருக்கும்.



ஜூலை மாத **ஆண்டு மலரில்** எந்தக் கதையைப்போடுவது என்பதைப் பற்றி இன்னமும் சரியாகத் தீர்மானிக்கவில்லை! அநேகமாக டெக்ஸ் வில்லரின் சாகஸம் அதில் வரும்! அடுத்த மாதம் உறுதிப்படுத்துகிறேன்!

ஆகஸ்ட் இதழில் ***அதிரடிப் படையினரின்*** புதியதொரு கதை வருகிறது! அதிரடிப் படையின், தலைவரான காப்டன் ஜான் இந்தக் கதையின் ஆரம்பத்திலேயே சுட்டுக் கொல்லப்படுவார்! அவரது இடத்தை இட்டு நிரப்பப் புதிதாக நியமிக்கப்படும் நபர் ஒரு பெண்! ஆமாம்—ஒரு பெண்ணின் தலைமையில் அதிரடிப் படை செயல்படுவதை ''***சாகஸத் தலைவி***''! சித்திரக் கதையில் நீங்கள் பார்க்கலாம்!

செப்டம்பர் மாதம் உங்கள் அபிமான **ஆர்ச்சி** திரும்ப வருகிறது! ஆர்ச்சியின் மாமூல் கோணங்கித் தனங்களுடன் வரும் இந்த நகைச்சுவைக் கதை உங்களுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் வெளியீடுகளைப் பற்றி அடுத்து எழுதுகிறேன்!


இந்த மாத இதழுடன் இணைப்பாக வரும் **சூப்பர் ஸ்பைடர்** சிறு கதையை படித்துப் பார்த்து உங்கள் அபிப்ராயங்களை எழுதியனுப்ப வேண்டுகிறேன்! தொடர்ந்து இதுபோல் கதைகள் வெளியிடலாமா என்பதையும் தெரியப்படுத்துங்களேன்!

S. விஜயன்.


லயன் 50-வது இதழில்...
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
டிராகன் நகரம்!
6 கதைகள்!
6 வண்ண கண்ணாடி அட்டை!
இலவச இணைப்பு!
ரூ. 5/-
வீனஸ் கல் மர்மம்!
ஸ்பைடர் சாகஸம்!
சந்தேகத்தின் நிழல்!
ஜார்ஜ் நோலன் சிறுகதை!


இரண்டு கால் பூனை!
இரட்டை வேட்டையர் சாகஸம்!


வேட்டை வீரர் 'ஜிம்' தோன்றும்
மரணத்தைத் தேடி!


"மேன்மைதகு ஆர்ச்சி அவர்களே"
சிறுநாவல்
14
இலவச இணைப்பாய் வருகிறது!

பரிசு ரூ.100/-



# சிரிப்போ சிரிப்பு...!

ஸ்பைடர் அப்படியென்ன சொல்லி விட்டானென்று **BAT-MAN** விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்? அரசியலைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்களா-சினிமாவைப் பற்றிப் பேசுகிறார்களா-? நாட்டு நடப்பை அலசுகிறார்களா-? அல்லது தங்களின் காமிக்ஸ் சாகஸத்தை நினைத்துப் பார்க்கிறார்களா?

உங்கள் கற்பனைக்கு வேலை கொடுத்து இந்தப் படத்திற்கு பொருத்தமான வசனத்தை எழுதியனுப்புங்களேன்!




எத்தனை வசனங்கள் வேண்டுமானாலும் நீங்கள் எழுதி அனுப்பலாம்! உங்கள் கார்டுகள்/கவர்கள் மீது "*சிரிப்போ சிரிப்பு*" என்று குறிப்பிட மறந்து விடாதீர்கள்! சிறப்பான வசனத்திற்கு **100/-** பரிசு! அது மட்டுமல்ல...... அந்த வசனம் *லயன்* **'50'**வது வெளியீடில் பிரசுரிக்கப்படும்!

 **20-4-88** வரை வரும் வசனங்கள் மட்டுமே போட்டியில் ஏற்கப்படும்!